தூதுவர் ஜுலீ ஜே. சங் அவர்கள் தெரிவித்த கருத்துக்கள்
U.S. Indo-Pacific Command இன் சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம்
எண்ணெய் சிந்துதல்களுக்கான பதிலளிப்பு தொடர்பான செயலமர்வு
2022 ஜூன் 6

அமெரிக்க Indo-Pacific Command சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்து இந்த நிகழ்வை நடத்தியதற்கும் ஒழுங்கு செய்ததற்கும் இலங்கை கடலோர காவற்படைக்கும் மற்றும் கடற்படைக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பாதுகாப்புப் படைகள் மட்டுமன்றி, துறைமுக அதிகாரசபை, வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் பலரையும் உள்ளடக்கிய இங்கு நான் காணும் சக்திவாய்ந்த பலதரப்பட்ட பார்வையாளர்களை மெச்சுகிறேன். இலங்கை அரசாங்கமும் கைத்தொழில்துறை தலைமைத்துவமும் இன்று இப்பயிற்சியில் பங்கேற்பதானது, சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் அனர்த்தப் பதிலளிப்பு என்பன எம் அனைவருக்கும் எவ்வளவு முக்கியமானது என்பதை சுட்டிக்காட்டுகிறது. குறிப்பாக நேற்று உலக சுற்றாடல் தினம் அனுஷ்டிக்கப்பட்டதனால்.

இது எண்ணெய் சிந்துதல்களின்போதான பதிலளிப்பு செயலமர்வு மற்றும் அதனுடன் தொடர்புடைய நிகழ்வுகள் நடைபெறும் நான்காவது முறையாகும். முதலாவது செயலமர்வு 2014ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் நடைபெற்றது. அதன்பின்னர் 2017 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் உணர்திறன் குறியீட்டு செயற்திட்டத்தை நாம் மேற்கொண்டோம். அதற்கடுத்து, 2021 ஆம் ஆண்டு மே மாதத்தில் இடம்பெற்ற X-Press Pearl அனர்த்தத்திற்கான ஒரு பதிலளிப்பு நடவடிக்கையாக 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இரண்டாவது செயலமர்வினை நாம் நடாத்தினோம். அந்த டிசம்பர் மாத செயலமர்வின் ஒரு தொடர்ச்சியாக, கற்றுக்கொண்ட கடந்த காலப் பாடங்களில் முன்னேற்றத்தைத் தொடர்வதற்கும், எதிர்கால முயற்சிகளைக் கண்டறிவதற்கும் தற்போது நாம் 2022 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் ஒன்றுகூடியுள்ளோம்.

இந்த செயலமர்வுத் தொடரானது, ஒரு முழு அளவிலான பரந்த சவால்களுக்கான நிஜ-உலக பதிலளிப்பு திறன்களை விருத்திசெய்வதில் எமது பங்குதாரர்களுக்கு உதவுவதற்கான அமெரிக்காவின் உறுதிப்பாட்டிற்கான ஒரு உதாரணமாகும்.

மகாசமுத்திரம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பது உலகளாவிய கரிசனைக்குரிய விடயமாகும், மற்றும் அனைத்து கடல்சார் நாடுகளும் நிறுவனங்களுக்கு இடையேயான செயற்திறனுடைய பதிலளிப்பு நடைமுறைகள் மற்றும் திறன்களை கட்டியெழுப்புவதற்காக ஒன்றிணைந்து பணியாற்றுதல் அவசியமாகும். இந்தோ பசுபிக்கில் ஒரு முக்கிய கடல்சார் மையமாக விளங்கும் இலங்கைக்கு இவ்வகையான தயார்நிலை மிகவும் முக்கியமானதாகும். X-Press Pearl விடயத்தில் நாம் பார்த்ததுபோன்று, ஒரு வழக்கமான சரக்குக் கப்பல் போக்குவரத்தானது, ஒரேயொரு தினத்திற்குள் இலங்கை வரலாற்றிலேயே மிக மோசமான சுற்றுச்சூழல் அனர்த்தமாக மாறியது.

நீர்கொழும்பு கடற்கரையில் மீன்கள் மற்றும் ஆமைகள் கரையொதுங்கிய கோரமான காட்சிகளையும், மீன்பிடிப்பதில் தங்கியிருக்கும் வாழ்வாதாரங்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளானதையும், மற்றும் தீர்ப்பதற்காக நாம் இன்னும் போராடிக்கொண்டிருக்கும் நீடித்த

இரசாயன தாக்கத்தையும் நாம் பார்த்தோம். எமது பிள்ளைகளுக்கு இதை எப்படி நாம் விளக்குவது? நாம் இதைவிட சிறப்பாகப் பணியாற்றுதல் அவசியம்.

எண்ணெய் சிந்துதல்களுக்கான பதிலளிப்பு என்பது, பரந்த அளவிலான கடல்சார் இயற்கை வள பிரச்சனைகளை நிவர்த்தி செய்யும் INDOPACOM சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டதில் ஒரு நிபுணத்துவப் பகுதி மட்டுமே. வருடந்தோறும் நடைபெறும் இந்தோ-பசிபிக் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மன்றத்தின் ஊடாக உட்பட்ட, சட்டவிரோத மீன்பிடிப்பினைக் குறைத்தல், கடலோரப் பிராந்திய முகாமைத்துவம் மற்றும் உயிர்ப்பல்வகைமைப் பாதுகாப்பு ஆகியவற்றில் உங்களுடன் இணைந்து பணியாற்ற நாங்கள் உறுதிபூண்டுள்ளோம்.

ஒரு முழு சமூகத்தினதும் முயற்சிக்காகவும் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவன பங்கேற்பாளர்களை ஒன்றிணைத்து, சுற்றுச்சூழல் பாதுகாப்பில் எமது பங்காண்மையினை அடிக்கோடிட்டுக் காட்டும் இந்த மன்றத்தை 2023 ஆம் ஆண்டில் நடாத்துவதற்கு இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றவும் நாம் விரும்புகிறோம்.

தேசிய எல்லைகள் மற்றும் சமூகப் பிரிவுகளுக்கு அப்பால் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கான இவ்வாறான ஒருங்கிணைந்த முயற்சிகள் பொருளாதார செழிப்பிற்கும் மற்றும் மோதல்களைத் தடுப்பதற்கும் பங்களிப்புச் செய்யும். இது எதிர்கால சந்ததியினருக்கான எமது தவிர்க்க முடியாத தார்மீகக் கடமையாகும்.

இச்செயலமர்வானது அனைத்து தரப்பினருக்கும் ஈடுபாடுடைய, உற்பத்தித்திறனுடைய மற்றும் பயனுடைய ஒன்றாக அமையும் என நான் எதிர்பார்க்கிறேன். வாரம் முழுவதும் அதைப் பற்றி மேலும் செவியுற ஆவலுடன் காத்திருக்கிறேன். நன்றி.